முருகப்பெருமான் துணை

**மகான் காலாங்கிநாதர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.05.2023**, செவ்வாய்கிழமை

1. காலத்தை வென்று மக்களுக்கு
கருணை வடிவாக நின்ற குருவே
காலனும் அஞ்ச அற்புதம் நடத்தும்
கந்தமகா ஞானசித்த குருவே
2. குருவே அரங்கமகா தேசிகனே
குவலயத்தில் உன் பெருமை கூறி
அறிவிப்பேன் சோபகிருது விடைதிங்கள்
அச்சமிலா மூவையோர் திகதி குசன்வாரம்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 16 ம் நாள், 30.05.2023, செவ்வாய்கிழமை)

3. வாரமதில் அறிவுரை ஆசிதனை
வழங்குவேன் காலாங்கிநாதரும்
சோரமில்லா நல்லுலகம் காண
செல்வவளம் பாதுகாப்பும் காண
4. காணவே அரங்க ஞானிகாட்டும்
கண்ணியமிக்க நெறிகள் தனை
ஞானமாக மக்கள் ஏற்று
நம்பிக்கை வைத்து வர வேண்டும்
5. வேண்டி சன்மார்க்கம் எனும்
வேலவன் சக்தி ரூபில்
தொண்டாக இணைந்து பின்
தெய்வ அம்சம் அடைய வேண்டும்
6. வேண்டியே அன்னதானமாம்
வேள்வியான தயவு நெறியை
தொண்டாக மக்களும் ஏற்று
தொடர்ந்து செய்து உலகமெலாம்
7. உலகமெலாம் சேவை பெருக
உலகோர் தருமவான்களாக
பலமாக சக்திநிலை அடைய
பண்பான மன போக்கு கூடி

8. கூடியே சான்றோர் களாகவே
குருவருளும் இனிதே நாடி
கூடியே ஞானவான்களாக
குருபரனை வணங்கித் தேறும்

9. தேறும் வல்லமை கொண்ட
தேவர்களாக ஞானிகளாக
மாறுதலை மக்களெல்லாம் கண்டு
மகத்துவம் உலகினில் படைப்பர்

10. படைக்கவே தருமலோகமாக
பசிபிணி விரட்டும் சக்திமிகு
தடையிலா ஞானலோகமாக
தவசிகள் ஆளுமைபுரிகின்ற

11. புரிகின்ற புகழ் பாதுகாப்பும்
புண்ணியமும் நிறைந்தவண்ணம்
அறிவிப்பேன் ஞான ஆட்சிகொண்ட
ஆறுமுகனார் ஆசிபெற்ற உலகமாகும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—